# கிறிஸ்து ஜெயந்தியின் இரு பக்கங்கள்!

**லில்லியன் ஸ்டான்லி**

**2024** வருவருடங்கள் பின்னோக்கி ஓடோடி முதல் கிறிஸ்துமஸை நோட்டம் விடுவோமா? மனித சரித்திரத்தின் முக்கியமான சம்பவத்திற்காக உலகம் காத்து தவித்துக்கொண்டிருந்தது. உலகம் உருவாகு முன்னே கடவுள் கிறிஸ்துமஸைத் திட்டமிட்டிருந்தார். 4000 வருடங்களுக்கு முன் ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த, “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' என்ற வாக்கின் நிறைவேறுதல் அது (ஆதி 12:3; லூக் 1:54,55,72). ஆபிரகாமின் வம்ச வரிசையில் தம் மகன் பிறந்து மனுக்குலத்திற்கு மீட்பு அருள வேண்டுமென்பதே அவரது திட்டம். அப்படியே, இவ்வுலகில் இயேசு உதித்தபோது இறைவனுக்கும் மனிதனுக்கும் ஒரு மின்சார உறவு உருவானது. அதன்படி இறைவன் மனிதனுக்கு அப்பாவானார், இயேசு அண்ணனானார். இயேசு கண்கவர் உலகத் தலைவருமல்ல, மாபெரும் தேவ மனிதனுமல்ல ஆனால் மனுவுடலில் கடவுள் ஆனவர். தேவனது கணக்கற்ற வங்கிக் கணக்கும் மனிதனின் நித்திய கடனும் ஒருவரில் கலந்ததுதான் கிறிஸ்துமஸ்!

ரோம சாம்ராஜ்யம் உருவாகி சுமார் 747 வருடங்களுக்குப் பின்னர் இயேசு பிறந்தார். அப்பொழுது சீசர் அகஸ்டசிற்குக் கீழ் செயல்பட்ட சட்டசபையால் ஏரோதிற்கு “யூதருக்கு அரசர்” என்ற பட்டம் சூட்டப்பட்டிருந்தது. ஆகையினால்தான், “யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?” என்று ஞானிகள் தேடி வந்தபோது, தனக்குப் போட்டியாகத் தோன்றியது யார் என்று ஏரோது கலங்கினான் (மத் 2:2).

இந்த முன்னுரையோடு கிறிஸ்து ஜெயந்தியின் இரு பக்கங்களையும் ஆராய்வோம். கிறிஸ்துமஸ் என்றாலே கண்கள் ஒளிவீசுகின்றன. ஆனால் ஓர் இருண்ட பக்கமும் உண்டென்பதை மறந்துவிடக் கூடாது.

**1. களிப்பும் கண்ணீரும்**

முதல் கிறிஸ்துமஸ் களிப்பால் மட்டும் நிறைந்திருக்கவில்லை. அதை சூழ்ந்த சரித்திரம் கண்ணீரால் நிறைந்திருக்கிறது. ஆனால் நமக்கு அது கொண்டாட்டமான நாள்தான். அது இறைமகன் மனுமகனான நாள். அவர் தம் மக்களை பாவங்களிலிருந்து மீட்பார் என்பதால் அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள் (மத் 1:21). கிறிஸ்துமஸ் இல்லாவிட்டால் நமது எதிர்காலமும் நம்பிக்கையும் அம்போதான். பயங்கர நரகம்தான் நம் முடிவு. இறைவன் பரிதாபப்பட்டு நம்மை மீட்க தம் மகனை அனுப்பினார். அதோடு கூட கலியாண மகிழ்ச்சி, குழந்தை பிறப்பின் மகிழ்ச்சி, தூதர்கள் காட்சியளித்த மகிழ்ச்சி, கிறிஸ்துமஸ் ஈவுகள், வழிநடத்தும் நட்சத்திரம். இப்படிப் பல! ஞானிகள், “மட்டில்லா பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்” (வச 23).

மறுபக்கத்திலோ துக்கத்தைக் காண்கிறோம். அவமானத்தையும் குற்றச்சாட்டையும், மரியாள் தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது. கண்ணீரினூடேதான் வானவில்லைக் கண்டாள். ஏரோதின் பட்டயத்திற்கு தம் குழந்தைச் செல்வங்களைக் காவு கொடுத்த தாய்மாரின் ஓலங்கள் ஊரைக் கலக்கின. சகரியா-எலிசபெத் பிள்ளைப்பேற்று ஆனந்தத்தில் சகரியாவின் ஊமைத்தனம் ஒரு கரும்புள்ளி. மரியாளின் ஆத்துமாவை ஒரு பட்டயம் ஊடுருவும் என்ற தீர்க்கதரிசனப் புதிரின் கலக்கம்!

கிறிஸ்தவம் என்பது இரண்டு கோடிக்கும் நடுவே வாழ்வதுதான். மகிழ்ச்சியும் துக்கமும், சிரிப்பும் கண்ணீரும் கலந்ததே வாழ்வு. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை என்பார்கள். அழுது வடிவதைவிட மிரியாமைப்போல பரமனைத் துதித்துப் பாடி, ஆடி வாழ்வது மேல். ‘‘உலகம் துன்பத்தால் நிறைந்திருந்தாலும், அதை மேற்கொள்வோராலும் நிறைந்திருக்கிறது'' என்றார் ஹெலன் கெல்லர். “என் துக்க மூட்டையை என்ன செய்ய?” என்று மக்கள் கேட்கின்றனர். சிலர் அதை முதுகிற்குப் பின்னால் எறிந்துவிட்டு ஒன்றும் நடவாததுபோல் இருக்க விரும்புகின்றனர். மற்றும் சிலர்

அதை மந்திரக்கோலால் மகிழ்ச்சியாய் மாற்ற விரும்புகின்றனர். இரண்டும் சாத்தியமில்லை. எனவே கற்று, போதிக்கப் பயன்படுத்துங்கள். ஞானத்திற்கும் பலத்திற்கும் ஏறும் படிக்கட்டுகளே துன்பங்களாம். இந்தக் கிறிஸ்துமஸிலிருந்து சிரித்து வாழ வேண்டும் என்று தினமும் பாடுவோம்; ஏனெனில், சிரிப்பு என்னும் சாவி தொலைந்தால் மகிழ்ச்சி என்னும் வீடு பூட்டியே இருக்கும்!

### 2. தெளிவும் குழப்பமும்

இறைச் சித்தத்தைக் கண்டுபிடிப்பது பல வேளைகளில் கடினமாகிவிடுகிறது. கடவுள் இறங்கி வந்து நாம் செய்ய வேண்டியதைச் சொல்வதில்லை. ஆண்டவர் ஏன் அமைதியாயிருக்கிறார் என்று குழப்பத்தில் தவிக்கிறோம். தூதன் மரியாளோடு பேசினான். யோசேப்பின் குழப்பத்தைத் தெளிவித்தான். விண்மீன் ஞானிகளை நடத்தியது. இன்று தூதர் நமக்குத் தோன்றுவதில்லை. தனது அனுபவத்தைக் கேள்வி கேட்ட பிறரால் ஒருவேளை குழம்பிப்போன மரியாள் தனது உறவினளிடம் சென்று தெளிவுடன் திரும்பினாள். தனக்கு நடப்பது தனது கற்பனையல்ல, கனவுமல்ல, தேவ செயலே என உறுதியானாள்.

அடுத்தப் பக்கம் குழப்பத்தைக் காண்கிறோம். யூதர்களுக்கு வேறொரு அரசர் பிறந்திருக்கிறார் என்ற செய்தி ஏரோதையும் எருசலேம் வாசிகளையும் கலங்கடித்தது (மத் 2:3). யாரும் தெளிவான ஆலோசனை தராத நிலையில் நிலைகுலைந்துபோன ஏரோது, குழந்தைகளைக் கொடூரமாய் கொலைச் செய்யக் கட்டளையிட்டான்.

குழப்பத்தில் வழிநடத்துதல் குதிரைக் கொம்புதான். "கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் இருக்கிறது" என்பதால் அரசர்கள் யோசபாத்தும் யோராமும் ஆலோசனை தேடி எலிசாவிடம் சென்றனர் (2 இரா 3:12). இப்பொழுது ஆண்டவரின் வார்த்தை முழுமையும் நம்மிடத்தில் உண்டே. திருமறையைக் கரைத்துக் குடித்திருப்போமானால் முடிச்சுகளை அவிழ்ப்பது கடினமல்ல. "இந்தச் சூழலில் நான் என்ன செய்ய இறைவன் விரும்புவார்?" என்று கேட்பீர்களானால் பதிலே உங்கள் வழிகாட்டியாகும். சிந்தனைக்கு இடமளித்தால் நிந்தனைக்கு இடமில்லை. அவர் நமது அதிசயமான ஆலோசனைக் கர்த்தர் (ஏசா 9:6). பொது அறிவைப் பயன்படுத்துங்கள். ஆண்டவர் நமக்குத் தெளிந்த புத்தியைக் கொடுத்திருக்கிறார் (2 தீமோ 1:7). தேறின கிறிஸ்தவ தலைவர்களின் ஆலோசனையை நாடுங்கள். கடின சூழ்நிலையின் வெவ்வேறு கோணங்களைக் காண மக்களது ஆலோசனைகள் உதவும். இறுதியில் தீர்மானிக்க வேண்டியது நீங்களன்றோ! ஆலோசனைகளைத் தேடினாலும் உங்கள் உள்ளுணர்வை நம்புங்கள்.

ஆண்டவருடைய வார்த்தை என்பதினால் தேவ தூதனுக்கு தலையசைக்க மரியாள் யாரது ஆலோசனையையும் கேட்கவில்லை. ஏரோது சரியானவர்களைக் கேட்டும் தவறான தீர்மானமெடுத்தான். நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே "நடத்தவும்," அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது (லூக் 1:78). "கடின சூழ்நிலைகளில் அடுத்த அடி எடுக்கத் தெரியாமல் திகைப்பவர்கள் இந்தச் சட்டத்தை நம்பியுள்ளனர்; அடுத்த சரியான காரியத்தைச் செய்யுங்கள். இறைவழிநடத்து தலை நம்பியிருப்போர்கூட அடுத்த எட்டு எடுக்கத் தெரியாமல் தவிக்கலாம். அந்நேரத்தில் இறைவனது பார்வையில் சரியான காரியத்தைச் செய்வது நல்ல தெரிந்தெடுப்பாகும். விசுவாச எட்டுகளை இறைவன் ஆசீர்வதிக்கிறார்; ஒரு எட்டு அடுத்த எட்டுக்கு நடத்தும்" என்கிறார் டாக்டர் டேவிட் ஜெரமியா.

### 3. அன்பும் வெறுப்பும்

கிறிஸ்துமஸ் கதை முழுவதிலும் வெள்ளிக் கம்பியாய் இழையோடுகிறது அன்பு. எல்லாம் வல்ல இறைவன் நாதியற்ற மனுகுலத்தின்மேல் கொண்ட பாசத்தின் கதையே கிறிஸ்துமஸ். மரியாள் - யோசேப்பின் அன்பைக் காண்கிறோம். துக்கமெனும் ஆழ்கடலில் மிதந்தாலும் எலிசபெத்தும் சகரியாவும் முதிர்வயது வரை ஒன்றித்து வாழ்ந்தது அன்பினாலே. ஞானிகள் கிழக்கிலிருந்து பரிசுகள் கொணர்ந்ததும், சிமியோன் குழந்தை இயேசுவைப் பார்க்க வந்து ஆசீர்வதித்ததும், தள்ளாடின வயதில் (84) அன்னாள் யாவருக்கும் இயேசுவைப்பற்றி உரைத்ததும் அன்பினாலே!

கிறிஸ்துமஸ் ரோஜாக்கள் மத்தியில் கிறிஸ்துமஸ் முட்களும் இருந்தன. தன்னுடைய சிங்காசனத்திற்குப் போட்டியிடக்கூடிய எவரையும் அகற்றிவிடும் கொடூர அரசன் ஏரோது. தன் ஆருயிர் மனைவியை கொலை செய்து, இளம் மைத்துனனை மூழ்கடித்தான். அவனது இரத்தத் தாகம் கொண்டப் பட்டயம் எருசலேம் பாலகரின் இரத்தத்தைக் குடித்தது. மேசியாவைக் கொலை செய்ய இது சாத்தானின் திட்டம்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்? இந்தக் கிறிஸ்துமஸில், நமது உள்ளத்தின் வெறுப்புகளைக் குப்பையில் கொட்டி, அவ்வெற்றிடத்தை தெய்வீக அன்பினால் நிரப்புவோமா? இருதயத்தில் வேர்விட்டுத் தளைத்துக் கொண்டிருக்கும் கோபம், கசப்பு, அன்பின்மை, வெறுப்பு யாவையும் பிடுங்கி எறிந்து விட்டு அங்கே அன்பு, பராமரிப்பு, புன்னகை, இரக்கம், மென்மையை நடுவோமா? அடி செய்யாததை அன்பு செய்யும். என்ன தான் நடந்தாலும் நிலை தடுமாறாமல் மென்மையாய் நடந்துகொள்வோமா? பொறுத்துப் போவோம். உங்களை விரோதிப்பவர், சபிப்பவர், பகைப்பவர், திட்டுகிறவர், துன்புறுத்துகிறவர் பெயர்களை ஒரு பக்கம் எழுதி, அதற்கு எதிராக - அன்பு, ஆசீர், நன்மை, ஜெபம் என்று கொட்டை எழுத்துக்களில் எழுதுங்கள் (மத் 5:44). அப்பொழுது பாரமற்றக் குருவியாய் புத்தாண்டிற்குள் பறந்து செல்வோம்.

### 4. நீதியும் துன்மார்க்கமும்

மரியாளை ஆண்டவர் தெரிந்தெடுக்க அவள் குற்றமற்றவளாய் இருந்திருக்க வேண்டும். எலிசபெத்திற்கு அவள் கொடுத்த பதிலிலிருந்து அவள் திருமறை சத்தியங்களில் கமுத்தாழ இருந்தாள் என்று தெரிகிறது (லூக் 1:46-55). அவளது கணவர் யோசேப்பு உத்தம புத்திரன் (மத் 1:19). எலிசபெத்தும் சகரியாவும் "சகல" கற்பனைகளின்படியும், குற்றமற்றவர்களாய் நடந்தார்கள் (லூக் 1:6). சிமியோன் நீதியும் தேவபக்தியும் உள்ள சத்தியவான் (2:25). சீரிய சிந்தையுடையவள் அன்னாள் (வச 37).

மறுபக்கம் பார்த்தால் முதல் கிறிஸ்துமஸில் துன்மார்க்கம் நிறைந்து வழிந்தது. அரசன் சவுல் கர்த்தருடைய குருக்களைக் கொல்லும்படி தம் சேவகருக்குக் கட்டளையிட்டபோது அவர்கள் மறுத்து விட்டனர் (1 சாமு 22:17). அவர்கள் பழைய ஏற்பாட்டில் வாழ்ந்தாலும் புதிய ஏற்பாட்டுத் தத்துவப்படி "கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிகிறதுபோல," "கிறிஸ்துவின் ஊழியராக" "இறைச்சித்தம்" செய்தனர் (எபே 6:5,6). ஏரோதின் படையோ கல்நெஞ்சராய், கெஞ்சும் தாய்மாரின் கண்ணெதிரே, சிசுக்களைக் கொன்று குவித்து, தம் எஜமானுக்குக் கீழ்ப்படிந்தனர். "ஏரோது கடுங்கோபம் கொண்டான்" (மத் 2:16). பொய்யும் பித்தலாட்டமும் அவன் இரத்தத்தில் ஓடின. "நானும் குழந்தையைப் பணிந்துகொள்ளவேண்டும்" என்று பொய் சொல்லி பக்திமான்போல் நடித்தான்.

நல்லவர்கள் 100% நல்லவர்களாயிருக்க வேண்டும். "அவர் ரொம்ப நல்லவர். ஆனால்..." என்று சொல்ல வழிவைக்கக் கூடாது. நமது பாதையில் பல வாழைப் பழத் தோல்கள் உண்டு. நமது தலைவர் இயேசு. "மனிதருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியம்" (அப் 5:29). சரியா? / தவறா? எதைச் செய்வது என்ற சவாலை சந்திக்கும்போதெல்லாம், நிதானித்துச் செயல்படுங்கள் (4:19). இன்று பெருகிவரும் பொய்யையும் ஏமாற்றுதலையும் களைந்து ஒருவரோடொருவர் நேர்மையாய் நடக்கப் பழகுவோம். பரிசுத்தம் சரிந்து கொண்டே போகும் இவ்வுலகில் "பரிசுத்தத்தோடும், நீதியோடும்" தேவனுக்கு ஊழியஞ் செய்வோம் (லூக் 1:71). எப்போதும் மனச்சான்றின் படியே நடவுங்கள். மனச்சான்றுக்கு மேலான நீதிமன்றம் இல்லை. நல்லது, கெட்டது என்ற குறுக்குத் தெருவில் நீங்களோ பிள்ளைகளோ நிற்கும்போது கடவுளைக் கூப்பிடுங்கள். வாழ்வின் வெற்றிக்கும் மகிழ்ச்சிக்கும் அடித்தளம் நற்குணமே.

### 5. தைரியமும் கோழைத்தனமும்

கிறிஸ்துவின் போர்ச்சேவகனாக முடியாது, கோழை. "பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப் போகக்கடவன்" என்று போருக்குப் போகுமுன் கிதியோன் சொன்னார் (நியா 7:3).

கிறிஸ்தவ வாழ்வு ஒரு யுத்தம். மரியாள் முக்காடிட்டுக் கொண்டு வீட்டுக்குள் முடங்கிக்கிடக்க முடியாது. நற்செய்தியை அறிவிக்க அந்த இளம் சிங்கம், தூரப் பயணம் செய்து எலிசபெத்திடம் சென்றாள். திரு மணத்திற்கு முன்னே அவளை கர்ப்பமாக்கிவிட்டான் என்று புரளி பேசும் கருநாவுகளுக்குப் பயந்து, யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொள்ள தயங்க முடியாது. எல்லாத் தடைகளையும் தாண்டி இறைவனின் உன்னதத்திட்டம் முன்செல்ல வேண்டும். இறைக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஞானிகள் ஏரோதின் கோபத்தை எதிர்கொள்ள ஆயத்தமாயிருந்தனர்.

அதே சமயம் கோழைகளான தலைமை குருக்களையும், மறைநூல் அறிஞர்களையும் சந்திக்கிறோம். இவர்கள் ஏரோதின் கட்டுப்பாட்டில் இருந்தனர். அவர்களுக்கு மேசியாவின் பிறப்பைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் தெரியும். இப்போது தீர்க்கதரிசன விண்மீனைக் குறித்து செய்தியும் வந்தது. பெட்டிப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு ஒட்டகம் ஏறி மேசியாவைப் பார்க்கப் புறப்பட வேண்டாமா? அவர்களை நிறுத்தியது எது? அரசன் ஏரோது பற்றிய பயம்! அற்புதக் குழந்தையைக் கண்டு அவரது வம்சத்தை ஆராய்ந்து கவனமாய் அவரைத் தொடர வேண்டியவர்கள் அரசனின் கூட்டாளிகளாயினர். வாழ்வின் மாபெரும் அனுபவத்தை இழந்து போயினர்.

கிறிஸ்தவ வாழ்வு உல்லாசப் பயணமல்ல; அது மனிதர்களோடு செய்யும் யுத்தமல்ல; ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின் மீது ஆற்றல் உடையோர், வானவெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடுதான் நமது யுத்தம் (எபே 6:12). கண்ணுக்குப் புலப்படாத இந்த சக்திகள்தான் நம்மை துன்புறுத்துபவை. மனுஷீக சக்திகளல்ல, வாழ்க்கைப் பிரச்சனைகள்தான் இந்த ஆன்மீகப் போராட்டத்திற்கு நமது முதுகெலும்பை வலுப்படுத்துபவை. வாழ்க்கை கடவுளின் வரப் பிரசாதம். பயமின்றி வாழ்க்கையை தைரியமாக எதிர்கொண்டு முன்னேறுங்கள். யானைக்கு பலம் தும்பிக்கையில், மனிதனுக்கு பலம் நம்பிக்கையில்!

**6. விசுவாசமும் அவிசுவாசமும்**

கிறிஸ்துமஸ் ஒரு விசுவாசக் கதை. "விசுவாசித்தவளே பாக்கியவதி" (லூக் 1:45). மரியாளின் பாடல் ஒரு விசுவாச கீதம் (வச 46-55). அவளது விசுவாசம் இறைவார்த்தையை அடித்தளமாகக் கொண்டது. அவள் உறவினர் வீட்டிற்குச் சென்றபோது, தான் கர்ப்பமாயிருப்பதாக அறியவுமில்லை, உணரவுமில்லை. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று அவள் நம்பினாள் (எபி 11:1). முதிர்வயதிலும் குழந்தைக்காக ஜெபிப்பதை நிறுத்தவில்லை சகரியா தம்பதியினர். ''உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு மகனைப் பெறுவாள்'' என்றான் தூதன் (லூக் 1:13). விசுவாசத்தினாலே ஞானிகள் நீண்ட பயணம் செய்து வெகுமதிகளைச் சுமந்து வந்தனர்.

மறுபக்கம் பார்த்தால் கிறிஸ்துமஸ் சரிதையில் விசுவாசமும் அவிசுவாசமும் பின்னிப்பிணைந்திருக்கின்றன. ஜெபத்திற்குத் திடீர் பதில் வந்தபோது சகரியா தடுமாறிவிட்டார் (லூக் 1:20). அவிசுவாசத்திற்கு தண்டனை பெற்றார்.

நாம் விசுவாசிகள் என்று அழைக்கப்பட்டாலும் வாழ்க்கை புரட்டிப் போடப்படும்போது சாத்தான் நமது விசுவாசத்திற்கு சவால் விடலாம். சாத்தானால் பேதுரு புடைக்கப்பட்டபோது அவர் விசுவாசத்தை இறுகப் பற்றிக் கொள்ளும்படியாக இயேசு அவருக்காய் விண்ணப்பம் செய்தார். அந்தக் கொடூரமான சூழலில் பேதுருவின் விசுவாசம் மங்கத் துவங்கியது. இயேசுவின் வேண்டுதலோ அவரைத் தாங்கிப் பிடித்தது. நம்மில் பலரும் சுளகில் புடைக்கத்தான் படுகிறோம். கர்த்தருக்குள் திடன் கொள்ளுங்கள். இயேசு உங்களுக்காய் ஜெபித்துக் கொண்டிருக்கிறார். பலவித சோதனைகளினாலே நமது விலையேறப்பெற்ற விசுவாசம் அக்கினிப் பரீட்சைக்கு உட்படும் என்று பின்னால் பேதுரு எழுதுகிறார் (1 பேதுரு 1:6,7). அதன் முடிவு ஆத்தும இரட்சிப்பு! (வச 9).

ஆகவே உங்கள் விசுவாசத்தை உடும்பாய் பற்றிக் கொள்ளுங்கள்.

**7. ஒளியும் இருளும்**

மக்கள் "வெளிச்சத்தை," "அருணோதயத்தைக்" கண்டார்கள் (லூக் 1:78,79). ஏசாயா உரைத்தபடி முதல் கிறிஸ்துமஸ் நமக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்தது (ஏசா 9:1,2). இருளில் இருக்கிறவர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே கிறிஸ்துமஸ். கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பை நாம் அனுபவித்திராவிடில் இந்த பெரிய வெளிச்சத்தைக் கண்டிருக்க மாட்டோம். சத்தியத்தையும் வெளிச்சத்தையும் தேடி இருளில் இன்னும் தடவிக்கொண்டிருப்போம். இந்த பண்டிகை நாட்களில் நமது இரட்சிப்பிற்காக ஆண்டவரைத் துதித்துக் கொண்டிருப்போம். "கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது" (லூக் 2:9).

மறுபக்கமோ கும்மிருட்டு. ஏசாயா 9:2, மக்கள் இருளில் "நடந்தார்கள்" என்கிறது. ஆனால் லூக்கா 1:78 இருளில் "உட்கார்ந்திருந்தார்கள்" என்கிறது. இறைவனின்றி இருளில் நடந்து, நடந்து, வாழ்க்கையில் முன்னேற முடியாமல் மக்கள் நம்பிக்கை இழந்து உட்கார்ந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். என்னே பரிதாபம்! திருத்தூதுவர் யோவான் கிறிஸ்துமஸை அருமையாய் வர்ணிக்கிறார். "அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை" (யோவா 1:5). மக்கள் அந்தகர் போல கடவுளைக் கண்டறிய தடவித் திரிந்து கொண்டிருந்தார்கள் (அப் 17:27).

ஒளி ஒரு பக்கம் பரலோகில் இருந்தது; மறுபக்கம் இருள் பூமியில் இருந்தது. இருளகல ஒளி இறங்கி பூமிக்கு வரவேண்டும். இதுதான் கிறிஸ்துமஸில் நடந்தது. "உன்னதத்தில் தேவன்" "பூமியிலே சமாதானம்" (லூக் 2:14). "மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" (மத் 4:15). "அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருப்பவர்களுக்கு அருணோதயம்" (லூக் 1:78,79). கலிலேயாவில் புறவினத்தவரின் ஆனந்தத்தைக் கற்பனை செய்யுங்கள். தாங்கள் தடவித் தேடித் திரிந்த இறைமகன் இப்பொழுது மனுமகனாகத் தங்கள் கண்ணெதிரே! அவர்களுக்கு கிறிஸ்துமஸ் வந்தது! இப்பொழுது நாம் என்ன செய்யலாம்? ஒளியிலிருக்கும் நாம் இருளிலிருப்போருக்கு அவ்வொளியைக் கொண்டுச் செல்வோமா அல்லது கிறிஸ்துமஸ் விருந்துண்டு தொந்தியைத் தடவி ஏப்பம் விடுவோமா? கண்களை ஏறிட்டு உங்களைச் சுற்றியிருக்கும் புறவினத்தவரின் கலிலேயாக்களைப் பாருங்கள். அவர்களுக்காக இரத்தக்கண்ணீர் வடிப்போம். மண்ணுக்குள் தலையைப் புதைத்துக் கொண்ட தலைமுறையாகவோ, பூகோளம் தீப்பற்றி எரியும்போது வீணை மீட்டிக்கொண்டிருந்தவர்களாகவோ நாம் நினைவுகூறப்பட வேண்டாம். நற்செய்தி அறிவிக்க நாம் செல்லும் போதெல்லாம் இழந்துபோன தமது படைப்பிற்கான இறைவனது இதய பாரத்தை இலகுவாக்குகிறோம்.

**முடிவுரை**

இந்த கிறிஸ்துமஸில் நமது வாழ்க்கை மாறட்டும். வாழ்வின் கண்ணீரைப் புதைத்துவிட்டு களிப்பைக் கொண்டாடுவோம். தினந்தோறும் ஞானத்திற்காய் ஜெபித்து, தெளிந்த புத்தியை ஈவாகப் பெறுவோம். நம்மிடம் வரும் காயப்பட்ட இருதயங்களை, ஏங்கும் உள்ளங்களை அன்பின் ஊற்றாய் தேற்றுவோம். நீதியை அணைத்துக்கொண்டு, துன்மார்க்கத்தை உதைத்துத் தள்ளுவோம். கோழைத்தனத்தை மூட்டைக்கட்டி முதுகை நிமிர்த்தி சிக்கல்கள் மத்தியிலும் கர்த்தரை சேவிப்போம். வாழ்க்கை சூறாவளிகளில், "ஏன் ஆண்டவரே?" என்று கேட்காமல் விசுவாசத்தை இரு கைகளால் இறுகப் பற்றிக்கொள்வோம். நமது ஆயிரம்விளக்குப் பகுதியை விட்டு வெளிவந்து, இருளில் உட்கார்ந்து ஒளி வருமா?, மெரி கிறிஸ்துமஸ் நமக்கும் வருமா? என்று ஏங்கிக் கொண்டிருப்போரை நோக்கி நடைபோட, இந்தக் கிறிஸ்துமஸ், திடமான தீர்மானம் எடுப்போமா? ■

(www.lilianstanley.com)